2017 ஜூலை 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 216, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

216—

வணிக வரி அலுவலகக் கட்டடம்

***8646—திரு. அ. நல்லதம்பி:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் வணிக வரி அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, வணிக வரித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் வணிக வரி அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.*

திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் வணிக வரி அலுவலகம் 1979 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு 38 வருடங்கள் ஆகின்றன. சிறு வியாபாரிகள், சிறு நிறுவனங்கள் என 2,800 வணிக வரி எண்களை வழங்கி, ஒரு குடியிருப்புப் பகுதியில் மாத வாடகை ரூபாய் 6,488 வீதம் தற்போது வழங்கப்பட்டு இயங்கி வருகிறது. ஆண்டிற்கு ஏறத்தாழ 2015–2016 ஆம் ஆண்டு 1,60,00,000 ரூபாயும், 2016–2017 ஆம் ஆண்டில் 1,96,00,000 ரூபாயும் வருவாயை ஈட்டுகின்ற இந்த வணிக வரி அலுவலகத்திற்கு, சொந்தமாக திருப்பத்தூர் சர்வே எண் 442-ல் 5,826 சதுர அடி உள்ள இடத்தில், இந்த அரசு விரைவாக வணிக வரி அலுவலகக் கட்டடம் கட்டித்தர வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டதட்ட பதிலையும் அவரே தெரிவித்திருக்கின்றார். அதற்குத் தேவையான நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதேபோன்று, திட்ட மதிப்பீடும் தயார் செய்யப்பட்டிருக்கின்றது. நிதித் துறைக்கு, நிதி ஆதாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது. கூடிய விரைவிலே அதற்கான அனுமதியைப் பெற்று, திருப்பத்தூர் வணிக வரி அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.

திரு. அ. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் பத்திரப் பதிவு அலுவலகம் 1899 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, இந்த அலுவலகத்திலிருந்து 1963 ஆம் ஆண்டும், 1983 ஆம் ஆண்டும், நாட்றாம்பள்ளி, ஜோலார்பேட்டை பத்திரப் பதிவு அலுவலகங்கள் பிரிந்து சென்று, புதிய கட்டடங்களில் இயங்கி வருகின்றன. திருப்பத்தூர் நகராட்சிப் பகுதியையும், 62 கிராம ஊராட்சிகளையும் கொண்டு ஏறத்தாழ 2015–2016 ஆம் ஆண்டில் 11,000 ஆவணங்களைப் பதிவு செய்துள்ள திருப்பத்தூர் பத்திரப் பதிவு அலுவலகத்திற்கான கட்டடம் பழுதடைந்துள்ளது. பழுதடைந்துள்ள, 118 ஆண்டுகள் பழமையான அந்த அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாமல் துறை மாறி கேள்வி கேட்டிருக்கின்றார். திருப்பத்தூரில் உள்ள

2017 ஜூலை 18]

சார்–பதிவாளர் அலுவலகம் பழுதடைந்துள்ளதாகவும், அங்கே புதியதாக கட்டடம் கட்ட வேண்டுமென்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார். அதனை ஆய்வு செய்து, ஆய்வின் அடிப்படையிலே, அது பழுதடைந்த நிலையில் இருந்தால், பழுது நீக்குவதா அல்லது புதிய கட்டடம் கட்டுவதா என்பதைக் கண்டறிந்து, கண்டிப்பாக அதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.

திரு. ஐ.எஸ். இன்பதுரை: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, என்னுடைய ராதாபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ராதாபுரத்தில் உள்ள பத்திரப் பதிவு அலுவலகம் நூறாண்டு காலம் மிகப் பழமைவாய்ந்த கட்டடத்தில் அமைந்துள்ளது. மழைக் காலங்களில் வெள்ளம் சூழ்ந்துகொள்வதால், அங்கு பத்திரப் பதிவு செய்ய முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே, பதிவு செய்யப்படுகின்ற பத்திரங்கள் பத்திரமாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில், அங்கே ஒரு புதிய கட்டடத்தைக் கட்டித் தர வேண்டுமென்று இந்த அரசை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: கேள்வியே திசைமாறி சென்று கொண்டிருக்கிறது. மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ராதாபுரம் சார்–பதிவாளர் அலுவலகம் மிகப் பழமைவாய்ந்த கட்டடத்தில் அமைந்துள்ளது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். நிதி ஆதாரம் குறித்து ஆய்வு செய்து, அவர் சொல்வதைப்போன்று, அந்தக் கட்டடம் மிகவும் பழமைவாய்ந்த கட்டடமாக இருப்பின், அதை ஆய்வு செய்து, கண்டிப்பாக புதிய கட்டடம் கட்டுவதற்கு, இந்த நிதி ஆண்டிலோ அல்லது வருகின்ற நிதியாண்டிலோ தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர்

அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள்.*

திரு. பெ. சுப்ரமணி: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம் புதிய தாலுகாவாக கடந்த ஆண்டு இந்த அரசால் அறிவிக்கப்பட்டது. தருமபுரி தொகுதியில் இருக்கின்ற பத்திரப் பதிவு அலுவலகமானது, தருமபுரி ஒன்றியத்தில் இருக்கின்ற 28 ஊராட்சிகள், தருமபுரி நகராட்சியிலுள்ள 33 வார்டுகள், நல்லம்பள்ளி ஒன்றியத்தில் இருக்கின்ற 32 ஊராட்சிகள் உள்ளடங்கிய பகுதிகளுக்கு அலுவலகமாக செயல்பட்டு வருகிறது. ஆகவே, நல்லம்பள்ளி தாலுகாவில் ஒரு புதிய பத்திரப் பதிவு அலுவலகம் இந்த ஆண்டே தொடங்கப்படுமா என்று மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, புதிய சார்–பதிவாளர் அலுவலகம் அமைப்பது குறித்து அரசு தற்போது ஒரு கொள்கை முடிவு எடுத்திருக்கிறது. அதாவது, அரசின் கொள்கை முடிவின்படி, தற்போது புதிய கட்டடம் கட்டுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசாணையை புதியதாகப் பிறப்பித்து, தற்போதுள்ள நிலையை மாற்றியமைக்கும்போது கண்டிப்பாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.*

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எனது பெருந்துறை தொகுதிக்குட்பட்ட திங்களூர் சார்–பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுவதற்குண்டான நிதி ஒதுக்கப்பட்டு ஓராண்டுக்கு மேலாகியும் இன்னும் கட்டடம்*

2017 ஜூலை 18]

கட்டப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த நிதியைப் பயன்படுத்தி சார்–பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பெருந்துறை தொகுதிக்குட்பட்ட திங்களூர் பகுதியில் கடந்த ஆண்டு சார்–பதிவாளர் அலுவலகம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதி வழங்கியிருந்தாலும்கூட, இதுவரை அப்பணியைத் தொடங்கவில்லை என்று தெரிவித்திருக்கிறார். அதில், ஏதாவது இடம் தொடர்பான பிரச்சினை இருக்கலாம் அல்லது வேறு ஏதாவது பிரச்சினை இருக்கலாம். அந்தப் பிரச்சினை என்னவென்று துறையின்மூலம் ஆய்வு செய்து, கூடிய விரைவில் அதன்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 217, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

217—

கொய்யாச் சாறு தொழிற்சாலை

***12646—திரு. ஏ.பி. நந்தகுமார்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அணைக்கட்டு தொகுதியில் கொய்யாச் சாறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*